Judicial Form No.53

(see Rule 42)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

STC. No:–1676/ 2018 Date:– 06.02.2026

Deposition of Accused for prosecution :– DW :–1

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிச்சாமி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் இவ்வழக்கின் எதிரி மற்றும் எதிரி தரப்பு சாட்சி 1 ஆவேன். நான் சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சத்தியமங்கலத்தில் எஸ்.பி.எஸ். என்ற தங்க நகை கடையை கதவு எண்.99ல் நடத்தி வருகிறேன். இக்கரை நெகமம் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன்.

2. புகார்தாரர் முருகேசனிடம் நான் பணம் வாங்கவில்லை மற்றும் காசோலையைக் கொடுக்கவில்லை இவ்வழக்கு பொய் வழக்காகும். நான் 2017–ம் வருடம் எனது கடையில் எனது மனைவியின் அக்கா மருமகள் தனலட்சுமி என்பவர் நான் கடையிலிருந்து வெளியே சென்ற சமயத்தில் தானாக முன்வந்து கடையின் நிர்வாகத்தை பார்த்துக்கொள்வார். கடையின் கல்லாப்பெட்டி சாவி அவரிடம் இருக்கும்.

3. அந்த சமயத்தில் கல்லாப்பெட்டியில் நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் காசோலையில் இரண்டு லட்சம் என்று தொகை மட்டும் எழுதி கையெழுத்து செய்து மற்றவை நிரப்பப்படாத சுமார் 25 காசோலைகளை வைத்திருந்தேன்.

4. அந்த வருடம் தனலட்சுமி மற்றும் கூட்டாளிகள் கோவையைச் சேர்ந்த மாசிலாதேவி, தனபால், சந்தோஷ், சத்தியமங்கலத்தைச் சேர்ந்த வேலுமணி, ஜெயா மற்றும் தனலட்சுமியின் கணவர் ரமேஷ்பாபு ஆகிய 7 பேரும் சேர்ந்து இருடியம் வியாபாரம் செய்வதாக என்னிடம் ஆசை வார்த்தைகள் கூறி 3 கோடி கொடுத்தால் இரண்டு மடங்கு பணம் தருவதாகக் கூறி என்னிடம் பணம் பெற்றுக்கொண்டனர்.

5. ஆனால் அவர்கள் கூறியபடி பணம் கொடுக்கவில்லை ஆகவே, நான் 25.05.2018–ம் வருடம் கோவை மாவட்டம் வடவள்ளி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அதன் அடிப்படையில் மேற்படி நபர்கள் மீது வடவள்ளி காவல் நிலையத்தில் குற்ற எண்.125/2018ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 2018–ம் வருடம் ஜனவரி 13ம் தேதி எனது கடையில் காணாமல்போன மேற்சொன்ன இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலைகளை தேடிப் பார்த்தேன். வேறு இடங்களிலும் தேடிப் பார்த்தேன். கடை ஊழியர்களிடமும், வாடிக்கையாளர்களிடம் விசாரித்தேன். கிடைக்கவில்லை.

7. குற்ற எண்.125/2018 வழக்கு போட்டதால் மேற்படி தனலட்சுமி என்மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக பழிவாங்கும் எண்ணத்தில் அவருடைய தாத்தா நாகப்பன் என்பவரிடம் காசோலை எண்.1116176 என்ற எண்ணுடைய காசோலையை கொடுத்து இந்நீதிமன்றத்தில் 1079/2018 வழக்கு தொடுத்தார். மேற்படி புகார் மனு சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நாகப்பன் இறந்துவிட்டார்.

8. மேற்படி வழக்கு நிலுயையில் இருந்து வருகிறது. மேற்படி தனலட்சுமி என்பவர் தனது பெரியப்பாவான சத்தி கரட்டுரைச் சேர்ந்த இவ்வழக்கின் புகார்தாரர் முருகேசன் என்பவரிடம் 3 காசோலைகளைக் கொடுத்தார். காசோலை எண்.116183, 116184, 116185 ஆகிய காசோலைகளை இவ்வழக்கின் புகார்தாரர் முருகேசன் 116183, 116184 ஆகிய காசோலைகளை வைத்து இவ்வழக்கைத் தாக்கல் செய்துவிட்டார்.

9. மேலும் புகார்தாரர் முருகேசன் என்பவர் அவரது சொந்த சம்மந்தியான திருச்செங்கோடைச் சேர்ந்த பொன்னுசாமி என்பவரிடம் காசோலை எண்.116185யை கொடுத்து எஸ்.டி.சி எண்.61/2019 திருச்செங்கோடு விரைவு நீதிமன்றத்தில் வழக்கு

தொடுத்தார். அந்த வழக்கிலிருந்து மேற்படி நீதிமன்றம் என்னை விடுதலை செய்துவிட்டது. மேற்படி வழக்கின் தீர்ப்பு நகல் **எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. மேலும் காணாமல்போன வங்கி காசோலைகள் குறித்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சத்தியமங்கலம் கிளை மேலாளருக்கு 05.07.2018–ம் தேதியன்று கடிதம் கொடுத்தேன். அந்தக் கடிதம் **எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய வழக்குரைஞர் மூலம் 04.09.2018–ம் தேதியன்று சத்தியமங்கலம் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளருக்கு காணாமல்போன காசோலைகள் விபரம் பற்றி பதிவுத் தபால் மூலம் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பு சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. காணாமல்போன காசோலை எண்களின் விபரம் 116150 முதல் 116166 வரை மற்றும் 116176 மற்றும் 116179 முதல் 116185 வரை மற்றும் 116190 முதல் 116193 வரை ஆகும். காசோலைகள் காணாமல்போனது குறித்து 09.09.2018–ம் தேதியன்று மக்கள் குரல் நாளிதழில் வழக்குரைஞர் மூலமாக அறிவிப்பு கொடுத்தேன். அதற்கான விளம்பர நாளிதழ் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)